**கவனிக்க.-** *2015.06.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1920 - 2015 ජූනි මස 19 වැනි සිකුරාදා - 2015.06.19

*1920 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 938 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 942 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2015, யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சட்டமா அதிபர் திணைக்களம்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற பிரிவின் காவலாளி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதுளை, அநுராதபுரம், மொனராகலை, அம்பாறை, நுவரெலியா, எம்பிலிபிட்டிய மற்றும் கண்டி மாவட்டங்களில் அமைந்துள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளின் விடுதிகளுக்கு ஆரம்ப நிலையின் தரம் III தேர்ச்சியற்ற பிரிவு காவலாளி பதவி வெற்றிடத்திற்கு கீழ்வரும் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (அந்தந்த மாவட்டங்களில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**பதவியின் தன்மை**.- நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

***சம்பள அளவுத்திட்டம்***.- இப்பதவிக்கான சம்பள அளவுதிட்டம்.- ரூபா 11,730 - 10 X 120 - 10 X 130 - 10 X 145 - 1 X 160 - ரூபா 17,600.

**தகைமைகள் :**

(1) ***கல்வித் தகைமைகள்***.- க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் இரண்டு (2) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) ***தொழில்சார் தகைமைகள்***.- இத்துறையில் தொழில்சார் தகைமைகள் சிறப்புத் தகைமையாகக் கொள்ளப்படும்.

(3) ***அனுபவம்***.- இத்துறையில் பெறப்பட்ட அனுபவம் சிறப்புத் தகைமையாகக் கொள்ளப்படும்.

(4) ***உடல் தகைமை***.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும் இப்பதவிக்கான கடமைகளை மேற்கொள்ளவும் உடல் மற்றும் மனநிலையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ***ஏனைய தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பம் கோரும் திகதியில் இப்பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(6) வயது.- 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

***ஆட்சேர்ப்பு முறை***.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் வரிசைப்படி வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

இதனகத்துக் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு 12'' என்ற முகவரிக்கு 2015.07.17 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'காவலாளிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

வை. ஜே. டபிள்யூ. விஜயதிலக்க,
சட்டமா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற பிரிவின் காவலாளி பதவி**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தொலைபேசி இலக்கம் :----.
6. பிறந்த திகதி :----.
7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் ----.

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.)
வருடம் :----, சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. -------------------- | ------------------------ |
| 2. -------------------- | ------------------------ |
| 3. -------------------- | ------------------------ |
| 4. -------------------- | ------------------------ |
| 5. -------------------- | ------------------------ |
| 6. -------------------- | ------------------------ |
| 7. -------------------- | ------------------------ |
| 8. -------------------- | ------------------------ |
| 9. -------------------- | ------------------------ |
| 10. -------------------- | ------------------------ |

க. பொ. த. (உ. த.)
வருடம் :----, சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. -------------------- | ------------------------ |
| 2. -------------------- | ------------------------ |
| 3. -------------------- | ------------------------ |
| 4. -------------------- | ------------------------ |

9. தொழில்சார் தகைமைகள் (பொருத்தப்பாடுடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.) :

10. **சேவை அனுபவம்**.- (பொருத்தப்பாடுடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.) :----.

மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என நான் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6-428

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

### கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) 3 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதுடன் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் மற்றும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கம்பனி பதிவாளர் நாயகத்தினால் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. **தகைமைகள்** :

2.1 கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) மொழி மற்றும் கணிதம் உட்பட 4 பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த ஏதேனும் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பதவிக்குரிய அனுபவத்தினைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

2.2 **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் மற்றும் இலங்கைக்கு வெளியில் எந்த ஒரு நாட்டிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 **ஏனையவை** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குரிய அனைத்த தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **நியமனத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று வருட தகுதிகாண் கால எல்லைக்குட்பட்டது. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று வருடத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைக்கு இணங்கு சேவைக்கு இணைந்து 5 வருட காலத்தினுள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருப்பதுடன், அரச மொழி அல்லாத மொழி மூலமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் கால எல்லைக்குள் அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொதுச் சட்ட விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கு அமைய இந்நியமனம் கொள்ளப்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாதவராகவும் முப்பது (30) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவீடு**.- இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பளம், பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இன் எம். என். - 1 - 2006 ஏ இன்படி ரூபா 13,120 - 10 x 145 - 11 x170 - 10 x 240 - 10 x 320 - 22,040 ஆகும்.

6. **நேர்முகப் பரீட்சை**.- (i) கம்பனிப் பதிவாளர் நாயகத்தின் அனுமதியுடன் அடிப்படைத் தகைமைகள் பரீசிக்கப்படும் தினத்திலேயே நேர்முகப் பரீட்சையில் நேர்முகப் பரீட்சைத் தேர்வுக் குழுவினால் புள்ளிகள் வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின்போது பின்வருமாறு புள்ளிகள் வழங்கப் படும் :

| விடயம் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமை | 45 |
| பதவிக்குரிய அனுபவம் (நீதிமன்ற அலுவல்கள், வழக்கு தொடர்பான விசாரணைகள் மற்றும் பொது அறிவு) | 30 |
| கணினி அறிவு | 10 |
| ஆங்கில அறிவு | 10 |
| நேர்முகப் பரீட்சையின் போதான நடத்தைகள் | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியினை விண்ணப்பப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடுவதுடன் நேர்முகப் பரீட்சை அம்மொழியிலேயே இடம்பெறும்.

7. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) விண்ணப்பப்படிவம் மாதிரிப்படிவத்தின்படி, ஏ4 கடதாசியில் தயாரித்து அனுப்பப்படல் வேண்டும். ஏ4 தாளின் இரண்டு பக்கத்தையும் பாவிப்பதுடன், இலக்கம் 1 தொடக்கம்

5 வரை முதலாவது பக்கத்திலும் மிகுதி இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலத்தினை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடல் வேண்டும் ;

(iii) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், "கம்பனி பதிவாளர் நாயகம், கம்பனி பதிவாளர் திணைக்களம், இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2015.07.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கம்பனி பதிவாளர் திணைக்கள கம்பனி பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/முப்படையின் அத்தியட்சகர் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவை வர்த்தமானியில் வெளியிட்டு பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,75,220 ரூபாவிற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளத்தினைப் பெறும் நிரந்தர அரச சேவையைக் கொண்ட அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் ;

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவை புரியும் அலுவலர் எனின் தான் சேவை புரியும் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும் ;

(vi) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பூரணப்படுத்தப்படாத சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். தபாலின்போது விண்ணப்பமொன்று காணாமல் போனதாக அல்லது தாமதமாகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது உகந்தது.

(vii) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பித்ததாகக் கருதி, குறித்த திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பத்தினை அனுப்பிவைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் கம்பனிப் பதிவாளர் நாயகத்தினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் இவ்வாறு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் இப்பதவிற்கான தகைமைகளைக் கொண்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*8. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.-* அறிவிக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி கீழ்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதியினைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்

**குறிப்பு :**

(i) பதவிக்காக பெற்றுக்கொண்ட அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் ;

(ii) விண்ணப்பப்பத்திரத்துடன் எந்தவொரு ஆவணமும் இணைக்கப்படக் கூடாது ;

(iii) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரியின் விண்ணப்பப் பத்திரம் பரிசீலிக்கப்பட மாட்டாது.

*9.* **பொய்யான தகவல்களை வழங்குதல்.-** விண்ணப்பப்பத்திரம் பூரணப்படுத்தலின்போது சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகள் பரீட்சிக்கும்போது எந்தவொரு விண்ணப்பதாரியும் தகைமையற்றவர் எனக் கருதும் எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரை அரச சேவையிலிருந்த நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவானதாகும். அதேபோல் வெற்றிடம் பூரணப்படுத்தப்படல் அல்லது பூரணப்படுத்தப்படாமை அல்லது வெற்றிடங்களில் பகுதியளவு பூரணப்படுத்தப்படல் போன்ற இறுதித் தீர்மானம் கம்பனிப் பதிவாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள், காலத்திற்கு காலம் அரசாங்க சேவை தொடர்பாக பிரேரிக்கப்படும் சுற்றறிக்கைகள், சேவை நடைமுறைகள் மற்றும் நிபந்தனை மாற்றங்கள் இப்பதவிக்கு உரித்தானதாகும்.

வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரின் கட்டளைப்படி,

கம்பனிகள் பதிவாளர் நாயகம்
(பணிகளை மேற்கொள்ளல்).

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
2015, யூன் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்**

1. 1.1 முதலெழுத்தினை இறுதியில் இட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
 1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
 1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 19.07.2015 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 பால் :

ஆண் -0
பெண் - 1 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

4.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

5. 5.1 பிரசாவுரிமை :----.
(பரம்பரையினாலா அல்லது பதிவினாலா என்பது)

5.2 தேசிய இனம் :----.

5.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. 6.1 கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.) - சுட்டெண் :----. வருடம் :----.
பாடங்கள் :----.

க. பொ. த. (உ. த.) - சுட்டெண் :----. வருடம் :----.
பாடங்கள் :----.

பட்டதாரியாயின், பின்வரும் விபரங்களை வழங்கவும் :

(i) பட்டம் :----.
(ii) வருடம் :----.

6.2 வேறு தகைமைகள் (கணினி அறிவு, ஏனையவை) :----.

6.3 2015.07.19 ஆந் திகதியில் தொழில் அனுபவம் :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6.4 ஆங்கில அறிவு :

வாசிப்பு :- மிக நன்று/நன்று/சாதாரணம்/குறைவு
எழுத்து :- மிக நன்று/நன்று/சாதாரணம்/குறைவு
பேச்சு :- மிக நன்று/நன்று/சாதாரணம்/குறைவு

7. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :
சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் :----.

8. விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரச சேவையில் தொழில் புரிந்து விலகியவரா அல்லது விலக்கப்பட்டவரா என்பது பற்றி :
----.

9. தற்போதும் அரச சேவை புரிபவராயின் தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் உள்ளதா ? :

9.1 ஏதேனும் தவறொன்றுக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா ? :----.

9.2 ஆம் எனில், விபரங்களைத் தருக :----.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல திட்டங்களுக்கும் அமைவாக நான் இந்நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமையுடையவர் எனவும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நேர்முகப் பரீட்சையின் சட்டதிட்டங்களில் நான் தகைமையற்றவர் என நேர்முகப் பரீட்சைக்கு முன்னர், அதன்போது அல்லது அதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதற்கு மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல்**
(வர்த்தமானி அறிவித்தலின் (7) iv இன்படி) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதுடன், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி, அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு .................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என உறுதிப்படுத்து கிறேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(இப்பகுதி அரச சேவை புரிபவராயின் மட்டும்)

12. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு :**
இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவை புரியும் திரு./திருமதி/செல்வி .................................... என்பவர் .................................... பதவியில் சேவை புரிகிறார் எனவும், அவருடைய சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் ஒழுக்காற்று நடவடிக்கை எதுவுமில்லை எனவும் உறுதிப்படுத்து கிறேன். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படின் விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கும் அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாய அமைச்சு**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

**இலங்கை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் **III ஆம் தரத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியில் நிலவும்** பதவி வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பக்காரரது வயது 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006A (MN-3) இற்கு அமைய ரூபா 15,005-4 x 180- 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பகாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல அடிப்படைக் கல்வித் தகைமையையும் மற்றும் தொழிற் தகைமையையும் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

**கல்வித் தகைமைகள்.-** க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான/கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்.-** கட்டடத் துறைக்கு உரியவரான கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் ஒரு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) ;

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (சிவில்) ;

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசயி உயர் பொறியியல் டிப்ளோமா ;

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல் ;

(vi) தொழில்துறைக்கு உரியவாறு தேசிய தொழிற்திறன் (NVQ 6) மட்டத்தில் தகைமையைப் பூரணப்படுத்தி இருத்தல் ;

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என இலங்கைத் தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**6. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 (21cm x 29cm) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 6 வரையான பந்திகள் முதலாம் பக்கத்தில் உட்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு உரிய தகவல்களை தமது கையெழுத்தினாலேயே மிகத் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாம் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் தயார் செய்கையில் அங்கு தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கும் மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கும் மேலாக ஆங்கிலத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015.07.20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், இல. 1095, கண்டி வீதி, பேராதனை எனும் முகவரிக்கு வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் III ஆம் தரத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனும் வாசகத்தை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(ஈ) இலங்கை வங்கியின் பேராதனை கிளையில் 7042612 ஆம் இலக்கத்தைக் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில்

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவினை தீவின் எந்தவொரு இலங்கை வங்கியிலும் செலுத்தி இயந்திரப் பொறியிடப்பட்ட பணம் கட்டும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்ப தானது பிரயோசனமுடையதாக இருக்கும்.

(உ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலிடுகை யின்போது காணாமல் போதல், தாமதமாதல் போன்றன தொடர்பில் திணைக்களம் பொறுப்புச் சொல்லமாட்டாது. விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்ப தானது பயன்மிக்கதாகும்.

(ஊ) அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது அரசாங்க சேவையில் உள்ள பதவிநிலை தரத்தில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பக்காரரது கையொப்பம் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(எ) தற்போது அரசாங்க சேவையில் உள்ளோர் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. **பரீட்சை விதிகள்**.- (அ) இப்பரீட்சை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பக்காரருக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பக்காரர் தமக்கு உரிய பரீட்சை நிலையத்தின் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக்கொண்ட அனுமதிப்பத்திரத்தைக் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சை எழுதுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(இ) பரீட்சைக்கு அமருவதற்காக விண்ணப்பக்காரரால் மேற்கொள் ளப்படுகின்ற போக்குவரத்துச் செலவோ அல்லது வேறு எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) **ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாடவேளையிலும் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு.

தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங் களைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(உ) பாடத்திட்டம் :

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணித்தியாலம்) | உச்சப் புள்ளி அளவு | சித்தி யெய்தும் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 1. மதிநுட்பப் பரீட்சை | 1 | 100 | 40% |
| 2 | 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை | 3 | 100 | 40% |

(i) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பக்காரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்னையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

(ii) பொதுப் பரீட்சை :

* அளவிடை மற்றும் சமப்படுத்துகை
* கட்டடப் பொருள் பயன்படுத்தப்படும் முறை மற்றும் தரம் தொடர்பான அறிவு
* அத்திவாரம், சுவர் கட்டல், பலகைக் கூரை, தகரக் கட்டு, முகடு, கொங்ரீட் மற்றும் கொங்ரீட் முகடு, அத்திவாரத் தட்டு, தரப்பு போன்றன அமையப்பெறும் முறை மற்றும் அமையப் பெறும் சந்தர்ப்பங்கள்
* கட்டட நிர்மாணம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்
* அளவிடையை பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், நிர்மாணங்கள் பொருட்டு தேவையான கட்டடப் பொருட்களின் அளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை என்பவற்றை மதிப்பீடு செய்தல்
* கட்டமைப்பு
* மின்சாரம், நீர், மலசலகூட வசதிகள் போன்ற அறிவு

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் உரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

8. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனகள் :**

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனை யின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பகாரரது மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான தொகையினர்

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்ட விண்ணப்பதாரர் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான தகைமை பெற்ற விண்ணப்பதாரரது பெறுபேற்று அட்டவணை ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெற்றதும் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரருக்கும் தாம் பரீட்சையின்போது ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை தனிப்பட்ட முறையில் வழங்குவதற்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமையைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இவ்வறிவித்தலுக்கு அமைய தகைமைகள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளை கொண்டிராமை தெரியவரின் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர் எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் நியமன அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்ப தாரரும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்குவிதி களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் நம்பிக்கையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சந்தர்ப்பம் வழங்கப்படும். பரீட்சை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

என். கே. ஏ. ரூபசிங்க,
ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக பயன்பாட்டிற்காக)

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

**Application for the Open Competitive Examination for Recruitment to the post of Technical Officer (Civil) of Class III of the Sri Lanka Technological Service in the Department of Export Agriculture - 2015**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர், ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்தில் குறிப்பிடவும்.) :----.
உதா. : SILVA, A. B

1.2 முழுப்பெயர் (சிங்களத்தில் தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 தொலைபேசி இல. (இருப்பின்) :

கையடக்க : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

வதிவிடம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

3. பால் :
ஆண் - 0
பெண் - 1
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

4. குடியியல் நிலை :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
[ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

6. (1) பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(2) விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

7. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழிமூலம் :----.

| பாடம் | பெற்ற தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழிமூலம் :----.

| பாடம் | பெற்ற தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

(இ) தொழிற் தகைமைகள் :

| டிப்ளோமா மற்றும் நிறுவனத்தின் பெயர் | சித்தி யடைந்துள்ள ஆண்டு | சுட்டெண் |
|---|---|---|
| | | |

8. (அ)

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி | |
| பணம் செலுத்திய வங்கிக் கிளை | |
| செலுத்திய பணம் | |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டி விடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.)

9. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அதில் பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியவருமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியவருமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

மேலும் இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்வைக்கப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................................... என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ............................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

11. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர் ஆயின் திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................................................................................ என்பவர் .................................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/அலுவலகத்தில் சேவை புரிகின்றார் எனவும், இப்பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் உறுதிகூறுகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும் அலுவலக முத்திரையும்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-504

---

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### போக்குவரத்து அலுவலர் (தரம் III) பதவிக்கு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

மதுவரித் திணைக்களத்தின் போக்குவரத்து அலுவலர் பதவி (பதவி எண்ணிக்கை 1) மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பதவி (பதவி எண்ணிக்கை 1) பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி. மீ. x 210 மி. மீ. (ஏ4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.07.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "போக்குவரத்து அலுவலர்/ தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லாவிதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

1. **பதவியின் பொதுவான கடமை விபரம் :**

1.1 **போக்குவரத்து அலுவலர்.**- திணைக்களத்தின் வாகனங்களை திருப்திகரமான மட்டத்தில் பேணுதலும் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாக குறித்தொதுக்கப்படுகின்ற ஏனைய மேற்பார்வைப் பணிகளும்.

1.2 **தொழில்நுட்ப அலுவலர்.**- திணைக்களத்தின் சகல நிருமாண வேலைகள் தொடர்பான நடவடிக்கைகளின்போது வேலைகளைத் திட்டமிடுதல், விலைமதிப்பீடுகளைத் தயாரித்தல், வெளிக்களத்தில் இருந்துகொண்டு வேலைகளை மேற்பார்வை செய்வதன் மூலம் குறித்த பணிகள் உரிய நியமத்துக்கு அமைவாக இடம்பெறுகின்றனவா என பரிசோதித்துப் பார்த்தல், அது தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், பதிவுகளைப் பேணுதல் அத்துடன் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாக குறித்தொதுக்கப்படுகின்ற ஏனைய மேற்பார்வைப் பணிகள்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**- மாதாந்தம் ரூ. 15,005- 4X180-6X240-11X320-20X360-ரூ. 27,885 சம்பளம் உரித்துடையதாகும். (பொ. நி. சு. 6/2006 iv இன்படி (MN-3-2006-A)

(வினைத்திறன் தடைப் பரீட்சைகள் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்கவாகும்.)

3. **வயதெல்லை.**- விண்ணப்பதாரர்கள் 2015.07.27 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

4.1 போக்குவரத்து அலுவலர் (தரம் III) :

(அ) கல்வித் தகைமைகள்.- மூன்று (3) விஞ்ஞான பாடங்கள் அடங்கலாக கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

தமிழ்/சிங்களம்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தி அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழில்சார் தகைமைகள் :

(i) தேசிய பயிலுநர் பயிற்சி அதிகாரசபையின் ஒருகொடவத்தை பயிற்சி நிலையத்தில் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கைநெறியொன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியில் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கைநெறியொன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கைநெறியொன்றைப் பயின்று அதனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அத்துடன்

(iv) எல்லா வகை மோட்டார் கார் மற்றும் லொறி ஓட்டுதல் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகனங்களைத் திருத்தும் ''ஏ'' வகுப்பு வேலைத்தளமொன்றுக்கு பொறுப்பாக செயலாற்றியுள்ளமை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(v) தொழிலாளர்களை ஒழுங்குசெய்யும் கட்டுப்படுத்தும் திறன், மோட்டார் வாகன தொகுதியைக் கொண்ட வாகன தரிப்பிடமொன்றைப் பராமரித்தல், போக்குவரத்து தொகுதியிலுள்ள ஊழியர்களைக் கட்டுப்படுத்தும் திறன் போன்றன இருத்தல் ;

அத்துடன்

(vi) பெற்றோல் மற்றும் டீசல் உள் எரிதல் (Internal Combustion) பெற்றோல் மற்றும் டீசல் என்ஜின் திருத்தும், பராமரிக்கும் அறிவு இருத்தல்.

4.2 தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) :

(அ) கல்வித் தகைமைகள்.- தூய கணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் அடங்கலாக மூன்று (3) விஞ்ஞான பாடங்களில்

கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மற்றுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

(ஆ) ***தொழில்சார் தகைமைகள் :***

(i) மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவகத்தினால் வழங்கப் படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vi) வேலை வாய்ப்புத் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்தி லான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து விசாரித்து கருத்துக்கள் பெறப்பட்டதன் பிற்பாடு மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் சமமானது என மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பிற தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(இ) ***அனுபவம்.***- உரிய துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் மேலதிக தகைமையொன்றாகக் கருதுப்படும்.

(ஈ) ***உடல் ரீதியான தகைமைகள்.***- (i) நாட்டின் எந்த வொரு பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கும் பதவிக் குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் ரீதியான, உள ரீதியான தகுதியைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(உ) ***ஏனைய தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கம் உடைய வர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) 2015.07.27 ஆந் திகதியன்று மேலே 3 மற்றும் 4 இல் தரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.**- எழுத்துப் போட்டிப் பரீட்சை யினதும், பொதுவான நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியான வர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

***எழுத்துப் பரீட்சை பற்றிய விபரங்கள்.***- நுண்ணறிவு (நேரம் : 1 1/2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.

விடயத்துக்கேற்ற தொழில்நுட்பப் பரீட்சை (நேரம் : 3 மணித்தியா லங்கள்) - (100 புள்ளிகள்)

விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்தின்படி ஒரு மொழியில் மாத்திரமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

***பாடத்திட்டம் :***

போக்குவரத்து அலுவலர் (தரம் III) :

***நுண்ணறிவு வினாத்தாள்.***- விஞ்ஞான ரீதியான, எண்சார்ந்த மற்றும் உருவங்கள் ரீதியாக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரர்களின் முடிவுகள் மற்றும் பிரதிச் செயற்பாடுகளைப் பரிசீலனை செய்வதன் மூலம் விண்ணப்ப தாரர்களின் புரிந்துணர்வு சக்தியையும் புத்திசாலித்தனத்தையும் கணித்தல் இத்தால் எதிபார்க்கப்படுகிறது.

***தொழில்நுட்ப வினாத்தாள்.***- மோட்டார் வாகன இயந்திர நுட்பம் மற்றும் நெடுஞ்சாலைச் சட்டங்கள் பற்றிய அறிவு இவ்வினாத் தாளிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) :

***நுண்ணறிவு வினாத்தாள்.***- விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் தர்க்க ரீதியாக பகுப்பாய்வு செய்யும் தன்மையையும் தீர்மானிக்கும் ஆற்றலையும் பரிசீலிக்குமுகமாக வினாக்களைக் கொண்டுள்ளது.

***தொழில்நுட்ப வினாத்தாள்.***- கட்டிட நிர்மாணம், வர்ணம் பூசுதல், மர வகைப்படுத்தல், மரங்களை தோய்த்தல், தரப்பட்ட வெளியுருவ அமைப்பின்படி வேலைக்கான திட்டங்களைத் தயாரித்தல், கணியப்பட்டியல்களுக்கு அமைவாக பட்டியல்களைத் தயாரித்தல் அத்துடன் அடிப்படை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பற்றிய அறிவு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரர்கள் 500 ரூபா பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையில் 0007041628 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக் கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட வங்கி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கிப் பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துக் கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்பட மாட்டாது.

7. **தகுதிகாண் காலம்**.- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு அக்கால முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப் படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்தால் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

8. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;

(ii) நாட்டின் எப்பிரதேசத்திலேனும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட முடியும் ;

9. **சேவை நிபந்தனைகள்**.- (அ) அரச கரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் அமுல்படுத்தப் படுகின்ற சகல ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(இ) அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளில் காட்டப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் நிபந்தனைகளும் ஏற்புடையனவாகும்.

எல். கே. ஜீ. குணவர்தன,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மதுவரித் திணைக்களத்தின் போக்குவரத்து அலுவலர்/ தொழில்நுட்ப அலுவலர் பதவி**

1. (i) முழுப்பெயர் (தாய் மொழியில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iv) அஞ்சல் முகவரி :----.
   (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
   (v) தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :----.

   2015.07.27 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.
5. இனம் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.
8. கல்வித் தகைமைகள் :

   (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் சித்திகள் :
   வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(மேற்படி சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

   (ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையின் சித்திகள் :
   வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(மேற்படி சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

   (iii) தொழில்சார் தகைமைகள் :

| கற்கைநெறியின் பெயர் | கற்கைநெறியை பின்பற்றிய காலம் இருந்து- வரை | கற்கைநெறியின் வருட எண்ணிக்கை | நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(மேற்படி சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(iv) அனுபவம்.- பாடசாலையிலிருந்து விலகியபின் செய்த தொழில்/பின்பற்றிய பயிற்சிநெறிகள் :

| தொழில் அல்லது பயற்சி நெறியின் பெயர் | காலம் இருந்து-வரை | நிறுவனம் | தொழில் எனின் விலகியமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(மேற்படி சேவைச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

9. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.

பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். |

10. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்புக்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப் படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6-641